DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai
**CC. No. 11/2022**

Deposition of LW10 Chief examined as PW 9 Dt. 20.01.2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | குணசேகரன் | Caste | : | |
| Father's/ Husband's Name | : | தங்கராசு | Calling | : | SI of Police of Pagasalai Police station (Rtd) |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | 63/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 20.01.2025
(A1,A2 called absent. U/s. 355 BNSS petition filed and allowed)

**முதல் விசாரணை**

நான் காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது குத்தாலத்தில் வசித்து வருகிறேன். சிறப்பு உதவி ஆய்வாளர் ராமமூர்த்தி என்பவரால் கடந்த 24.08.2021 ம் தேதி பாகசாலை காவல் நிலைய குற்ற எண்.303/2021 பிரிவு ச/பி. 294(பி), 324, 506(2) இதச படி வழக்கு பதிவு செய்யப்பட்டு முதல் கட்ட விசாரணையை முடித்து வழக்கை மேல் விசாரணை செய்யும் பொருட்டு என் பார்வைக்கு வைத்ததை நான் மேல் விசாரணைக்கு எடுத்து கொண்டு பட்டியல் சாட்சிகளை விசாரணை செய்தேன். சிறப்பு உதவி ஆய்வாளரிடம் கூறியதையே என்னிடமும் கூறியதால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. பின்னர் இந்த வழக்கில் காயம் பட்ட விஜயகுமார் அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த மயிலாடுதுறை அரசு மருத்துவமனை மருத்துவர் ரவீந்திரன் மற்றும் திருவாரூர் அரசு மருத்துவர் அங்கதகுமார் ஆகியோர்களையும் விசாரித்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச் சான்றுகளை பெற்று அவரிகளிடமிருந்து வாக்குமூலத்தினை பதிவு செய்தேன். மருத்துவர் கொடுத்த காயச்சான்றின் அடிப்படையில் அ.சா.1க்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்பதால் வழக்கின் சட்டப்பிரவுகளான 294(பி), 324, 506(2) இதசவில் இருந்து 294(பி), 326, 506(2) இதசவாக சட்டப்பிரிவுகளை மாற்று அறிக்கை தயார் செய்தேன். **(சட்டப்பிரிவு மாற்று அறிக்கை அ.சாஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இவ்வழக்கினை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் ராமமூர்த்தி என்பவரை விசாரித்து அவரிடமிருந்து வாக்குமூலத்தினை பதிவு செய்தேன். பின்னர் 26.09.2021 ம் தேதி எனது புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் கீழ் 294(பி), 326, 506(2) இதச படி இறுதியறிக்கையினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கின் மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் வழங்கிய விபத்து பதிவேட்டை பார்த்தீர்களா என்றால் பார்த்தேன். அதில் 24.08.2021 மாலை 6.00 மணிக்கு சம்பவம் நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். திருவாரூர் மருத்துவமனையில் வழங்கிய விபத்து பதிவேட்டில் 25.08.2021 ம் தேதி அதிகாலை 2.00 மணிக்கு சிகிச்சையில் சேர்ந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் வழங்கிய விபத்து பதிவேட்டில் சம்பவ நேரம் மாலை 6.00 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். உங்களிடம் கொடுத்த வாக்குமூலத்தில் சம்பவ நேரம் சுமார் இரவு 9.30 மணி என்று

சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல 6.00 மணிக்கு சம்பவம் நடந்ததாக சொன்னார். முதல் தகவல் அறிக்கையிலும், சாட்சிகளின் வாக்குமூலத்திலும், புகார் வாக்குமூலத்திலும் சம்பவ நேரம் 6.00 மணி என்று சொல்லியுள்ளாரா என்றால் சொல்லவில்லை. கொடுத்த புகாரில் 3 செண்ட் காலி மனை சம்பந்தமாக பிரச்சனை இருந்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். புகார்தாரர் அவரது மனைவியை 10 வருடமாக பிரிந்து வாழ்ந்து வருவதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கில் எதிரிகள் பயன்படுத்தியதாக சொல்லப்படும் அரிவாளை கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். மருத்துவரிடம் சம்பவ நேரம் 6.00 மணி என்று சொல்லியுள்ளார் உங்களிடம் 6.00 மணி என்று சொல்லியுள்ளார என்றால் என்னிடம் சொன்னார் ஆவணங்கள் எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த ராமமூர்த்தி சிறப்பு உதவி ஆய்வாளரை விசாரித்தீர்களா என்றால் விசாரித்தேன். அவருடைய விசாரணையில் சம்பவம் நடந்த நேரத்தை அ.சா.1 மருத்துவரிடம் 6.00 மணி என்றும் போலீஸ் விசாரணையில் 9.00 மணி என்றும் மாறி மாறி சொன்னதாக உங்களுடைய விசாரணையில் அவர் சொன்னாரா என்றால் அப்படி எதுவும் சொல்லவில்லை. அ.சா.1–க்கு எடுக்கப்பட்ட எக்ஸ்ரே நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. மருத்துவரிடம் சொன்ன நேரம் தான் சரியான நேரம் என்று உங்கள் விசாரணையில் உறுதிபடுத்தி னீர்கள் என்றால் சரிதான். இந்த வழக்கை சரிவர விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. பார்வை மகசர், மாதிரி வரைபடம் மற்ற ஆவணங்கள், அனைத்தும் வழக்கிற்கு ஏதுவாக காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்து எதிரிகள் மீது பொய்யான குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல. அ.சா 1 க்கு வேறு வகையில் ஏற்பட்ட காயத்தை மறைத்து கொடுக்கப்பட்ட பொய்யான வாக்குமூலத்தை பெற்று சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. அவர்களுக்குள் உள்ள சொத்து சம்பந்தமான பிரச்சனையை குற்ற வழக்காக மாற்றுவதற்காக கொடுக்கப்பட்ட பொய்யான புகாருக்கு போடப்பட்ட பொய்யான வழக்கு என்றால் சரியல்ல. அதனால் தான் உங்கள் விசாரணையில் சம்பவ நேரத்தை உறுதிபடுத்த முடியவில்லை என்றால் சரியல்ல.

T. [signature]

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது

[signature] 20/01/25

நீதித்துறை நடுவர் எண் II
மயிலாடுதுறை.